**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

OS.No.811/2023 பெயர் : புஷ்பா நாள் : 25.08.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியும். இந்த வழக்கை யாரால், யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், என் 2-வது மகன், எனது கணவர் மற்றும் மூத்த மகன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தை என் கணவர் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு கிரையம் பெற்றார். என் கணவர் கூலி வேலை செய்து வந்தார், கடந்த 2 ஆண்டுகளாக படுத்தப் படுக்கையாக உள்ளார். தாவா சொத்து தார்சு வீடு என்றால், சரிதான். சின்ன சின்ன வீடுகளாக 4 வீடுகள் உள்ளது. தாவ சொத்து ரூ.10 லட்சத்திற்கு கிரையம் பெறப்பட்டது. மேற்படி தொகையை சிறிது சிறிதாக 3 முறை கொடுத்து கிரையம் பெற்றார். தாவா சொத்தை என் கொழுந்தனார் மனைவி கிரையம் கொடுத்தார். என் கணவர் கிரையம் பெறுவதற்கு முன்பு தாவா சொத்து என் கொழுந்தனார் பெயரில் இருந்தது. கிரைய தொகையை சேர்த்து வைத்து ரொக்கமாக கொழுந்தனார் மனைவியிடம் கொடுத்தார். பணம் கொடுத்தபோது, வேலு, பாலு ஆகியோர் உடன் இருந்தார்கள். கிரையம் பெற்ற சமயத்தில் பத்திர அலுவலகத்திற்கு பாலு என்பவர் உடன் வந்தார். தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பு வீட்டை சென்று பார்த்தேனா என்றால், நான் அங்கேயே தான் எனக்கு திருமணம் ஆன நாளிலிருந்து குடியிருந்து வருகிறேன். தற்போது யார் யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால், நான், எனது கணவர், எனது பெரிய மகன் குடியிருந்து வருகிறோம். தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு எனது இளைய மகன் ரூ.3,30,000/- கொடுத்துள்ளார் என்றாலும்,

கொடுக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல. தாவா சொத்தில் பங்கு கேட்பதற்கு வாதிக்கு சட்டப்படி உரிமை உள்ளது என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்தை வாங்கிய சமயத்தில் என் இளைய மகன் எங்களுடன் தான் வசித்து வந்தார். வாதிக்கு சட்டப்படி தாவா சொத்தில் 3/1-ல் பாகம் உரிமை உள்ளது என்று சொன்னால், சரியல்ல.